## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – சிறப்புப் பள்ளிகள் – பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகள் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு டிவிடி பிளேயர் (DVD Player) வழங்குதல் – 2016–2017 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.7,28,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1டி) எண்: 79**

**நாள்: 15.11.2016**
**துன்முகி – ஐப்பசி 30**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்க:**

1. அரசாணை (1டி) எண் 59, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 28.12.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண் 2844/சிப3/2016, நாள் 14.07.2016.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2015–2016ஆம் ஆண்டிற்கு, அரசு பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் 108 மாணவ / மாணவியருக்கு டிவிடி பிளேயர் (DVD Player) உடன் ஹெட்போன் (Head Phone) வாங்கி வழங்குவதற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.5,61,600/– (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபத்தோறாயிரத்து ஆறுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், அரசு பார்வையற்றோர் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2016–2017ஆம் நிதியாண்டிற்கு, டிவிடி பிளேயர் (DVD Player) உடன் ஹெட்போன் (Headphone) வாங்கி வழங்குவதற்கு, கீழ்கண்ட விவரப்படி ரூ.7,70,000/– நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத் தொடராணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | 10ம் வகுப்பு மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை | 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர். | 26 | 27 | 53 |
| 2. | பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி | 18 | 25 | 43 |
| 3. | பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி | 22 | 22 | 44 |
| | **மொத்தம்** | **66** | **74** | **140** |

குறைந்த விலைப் புள்ளியின் ஒரு DVD பிளேயர் விலை – ரூ.5,500/–
140 DVD பிளேயர் மொத்த விலை (140 x 5,500) = ரூ.7,70,000/–

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்து, பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2016–2017ஆம் நிதியாண்டிற்கு DVD பிளேயர் உடன் ஹெட்போன் (Headphone) வாங்கி வழங்குவதற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.7,28,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AA–பார்வையற்றோர் பள்ளி – 24–பொருள்களும் வழங்கலும்”.**

**(து.தொ.கு 2235 02 101 AA 2407)**

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.16,000/– 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது. 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி (ச.ந.)த் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்டுகிறார்.

6. இவ்வாணை நித்துறையின் அலுவல்சாரா எண் 56159/நிதி(சந)/2016, நாள் 08.11.2016–இல் பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1098 (ஆயிரத்து தொன்னூற்று எட்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

நிதித் [ச.ந. வ.செ.பொ.II] துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.